தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 254 | 4 Pages | 22.07.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 254 | 4 பக்கங்கள் | 22.07.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை**

**விளக்கம்:**
பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்குத் துணையாய் அவ்வாறேகாக்கவல்லதும்மழையாகும்.

# தலைமைச்செயலகத்தில் முதல்அமைச்சர் விஜய் அறை இடம் மாறுகிறதா?: பரபரப்பு தகவல்கள்

சென்னை, ஜூலை 22

சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்அமைச்சர் விஜய்யின் அறை இடம் மாறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னை காமராஜர் சாலையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் தமிழக அரசின் தலைமைச்செயலகம் இயங்கிவருகிறது.

கோட்டை கட்டிடத்தின் முதல் தளத்தில், முதல்அமைச்சர் அறை மற்றும் அலுவலகம் உள்ளது. இதேபோல், அமைச்சர்கள் அலுவலகம், சட்டசபை கூட்ட அரங்கம், தலைமைச் செயலாளர் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த செயலாளர்களின் அலுவலகங்கள், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அறை, நூலகம் உள்ளிட்டவை அந்தக் கட்டிடத்தில்தான் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில், முதல்அமைச்சர் விஜயை சந்திக்க நாள்தோறும் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், அரசு உயர் அதிகாரிகள் என பலரும் வந்து செல்கின்றனர்.

இதனால், தற்போதுள்ள முதல்அமைச்சர் அலுவலகத்தில் இடநெருக்கடி ஏற்படுவதால், அவரை சந்திக்க வருபவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதாக கூறப்படுகிறது. இதனால், முதல்அமைச்சர் அறை மற்றும் அலுவலகத்தை, கோட்டை கட்டிடத்திற்கு அருகே உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது மாடிக்கு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



தற்போது, அங்கு கருத்தரங்க கூடமும், ஆய்வு கூட்டங்களில் பங்கேற்பவர்களுக்கான உணவருந்தும் கூடமும் உள்ளது. அவற்றை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, 10வது மாடி முழுவதுமே முதல்அமைச்சர் அறை மற்றும் அலுவலக பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது.

இடநெருக்கடியால், முதல்அமைச்சர் அறை மாற்றப்பட இருப்பதாக கூறப்பட்டாலும், வாஸ்துப்படி தற்போதைய அறை சரியில்லை என்று, அவருடைய ஆஸ்தான ஜோதிடர் கூறியதாகவும், தொடர்ந்து உச்சத்தில் இருக்க உயரமான கட்டிடத்தில் முதல்அமைச்சர் அலுவலகம் செயல்பட வேண்டும் என்று கூறியதாகவும், அதுவும் கடலை பார்த்தபடி முதல்அமைச்சர் அறை இருக்க வேண்டும் என்று கூறியதாகவும் தெரிகிறது. அதன்படியே, முதல்அமைச்சர் அறை மற்றும் அலுவலகம் மாற்றப்பட இருப்பதாக சொல்லப்பட்டாலும், இது தொடர்பான அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

## வியட்நாம்: ஆம்னி பஸ்சில் பயங்கர தீ விபத்து 7 பேர் பலி



ஹனொய், ஜூலை 22

வியட்நாமின் லம் டான்க் மாகாணத்தில் இருந்து சி மிங் நகருக்கு நேற்று இரவு ஆம்னி பஸ் புறப்பட்டது. அந்த பஸ்சில் 24 பேர் பயணித்தனர்.

இந்நிலையில், டாங் நாய் நகரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை சென்றுகொண்டிருந்தபோது பஸ்சில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென வேகமாக பரவிய நிலையில் பஸ்சில் இருந்த பயணிகள் அனைவரும் தப்பிக்க முயற்சித்தனர்.

ஆனாலும், இந்த தீ விபத்தில் பஸ்சில் பயணித்த 7 பேர் தீயில் சிக்கி உடல் கருகி உயிரிழந்தனர். மேலும், 5 பயணிகள் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஜனாதிபதி திரவுபதி முர்மு வடக்கு மாசிடோனியா பயணம்



கோப்ஜி, ஜூலை 22

ஜனாதிபதி திரவுபதி முர்மு ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ருமேனியா ஆகிய 3 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

அதன்படி பயணத்தின் முதல் நாடாக ஜனாதிபதி முர்மு நேற்று மால்டோவா சென்றார். அங்கு அந்நாட்டு ஜனாதிபதி மயா சந்து, துணை பிரதமர் மைஹை பாப்சொய் உள்பட பலரை ஜனாதிபதி முர்மு சந்தித்தார்.

இந்நிலையில், மால்டோவா பயணத்தை நிறைவு செய்த ஜனாதிபதி திரவுபதி முர்மு பயணத்தின் 2வது நாடாக இன்று வடக்கு மாசிடோனியா நாட்டிற்கு சென்றுள்ளார். வடக்கு மாசிடோனியாவுக்கு சென்ற முதல் இந்திய ஜனாதிபதி என்ற பெருமையை முர்மு பெற்றுள்ளார்.

ஜனாதிபதி முர்மு வடக்கு மாசிடோனியா ஜனாதிபதி சில்ஜனொவ்ஸ்கா டவொகாவை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

## ஆப்கானிஸ்தானில் கனமழை, வெள்ளம் 20 பேர் பலி...



காபுல், ஜூலை 22

ஆப்கானிஸ்தானில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக அந்நாட்டின் நுரிஸ்தான் மாகாணத்தில் கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது.

கனமழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால்அம்மாகாணத்தின்பரன்மாகாணம்கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கனமழை, வெள்ளத்தால் ஆப்கானிஸ்தானில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அதேவேளை, வெள்ளத்தில் 100க்கும் மேற்பட்டோர் மாயமான நிலையில் மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

## வாரணாசியில் மக்கள் நெரிசலைக் கட்டுப்படுத்த புதுமைத் தீர்வுகள் தேர்வு

சென்னை, 21 ஜூலை 2026:

வாரணாசியின் பாரம்பரிய நகரப் பகுதியில் பாதசாரிகள் நடமாட்டம், அணுகல் வசதி மற்றும் மக்கள் நெரிசல் மேலாண்மையை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட 'நிலையான நகரங்கள் சவால் வாரணாசி' திட்டத்தின் வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்தமுயற்சியைவாரணாசிமாநகராட்சி, டொயோட்டா மொபிலிட்டி ஃபவுண்டேஷன், சேலஞ்ச் ஒர்க்ஸ் மற்றும் டபிள்யூ ஆர்ஐ இந்தியா ஆகியவை இணைந்து முன்னெடுத்தன.

CITYDATA.AI மற்றும் நிப்பான் கோயி இணைந்து உருவாக்கிய 'சிட்டிஃப்ளோ', தி அர்பனைசர் உருவாக்கிய 'ஜன்ஜாத்ரா' ஆகிய தீர்வுகள் வெற்றியாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டங்களை வாரணாசி நகரம் முழுவதும் செயல்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட உள்ளது. மேலும், VOGIC AI உருவாக்கிய 'பெஹ்தர்வே' மற்றும் பிரமேயா கன்சல்டிங் உருவாக்கிய 'நயிச்சால்' ஆகியவை சிறப்பு பாராட்டு விருதைப் பெற்றுள்ளன.

செயற்கை நுண்ணறிவு, கணினிப் பார்வை தொழில்நுட்பம் மற்றும் நிகழ்நேர தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றைப் பயன்படுத்தும் இந்தத் தீர்வுகள், மக்கள் நெரிசலை திறம்படக் கண்காணித்து கட்டுப்படுத்துவதுடன், பாதசாரிகள் பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல் வசதிகளையும் மேம்படுத்துகின்றன. இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற இந்த புதுமைச் சவாலில் நகர நிர்வாகம், போக்குவரத்து நிபுணர்கள் மற்றும் பல்வேறு துறை வல்லுநர்கள் இணைந்து செயல்பட்டனர்...

## பிராமல் ஃபைனான்ஸின் காலாண்டு நிதி முடிவுகள் நிகர லாபம் 67% உயர்ந்து ₹461 கோடியாகப் பதிவு

சென்னை, ஜூலை 21,

2027ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் பிராமல் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிகர லாபம் முந்தைய ஆண்டை விட 67 சதவீதம் அதிகரித்து ₹461 கோடியாக பதிவாகியிருக்கிறது. நிர்வகிக்கப்படும் சொத்துக்களின் வளர்ச்சி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு, சில்லறை கடன்கள் வழங்கலில் சிறப்பான வளர்ச்சி மற்றும் நிலையான சொத்துத் தரம் ஆகியவை இந்தச்சிறப்பானசெயல்பாட்டுக்கும், அதிகரித்த லாபத்திற்கும் முக்கிய காரணங்களாக இருந்திருக்கின்றன. வாடிக்கையாளர்களின் வலுவான தேவை வரவேற்பு மற்றும் சீரான வணிக வளர்ச்சியின் எதிரொலியாக, வழங்கப்பட்ட சில்லறை கடன்கள் முந்தைய ஆண்டை விட 44 சதவீதம் உயர்ந்து ₹12,527 கோடியாகப் பதிவாகியுள்ளது. நிர்வகிக்கப்படும் மொத்த சொத்து மதிப்பு 25% அதிகரித்து ₹1.07 லட்சம் கோடியை எட்டியுள்ளது. அதேவேளையில், சில்லறைப் பிரிவின் சொத்து மதிப்பு 32 சதவீதம் வளர்ச்சிகண்டு ₹91,249 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும், பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு, ₹4,000 கோடி வரை புதிய நிதி திரட்டும் முன்வரைவு திட்டத்திற்கும் நிறுவனத்தின் இயக்குனர் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது.

இந்தியாவில் உயர் அடுக்கிலுள்ள வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் பிராமல் ஃபைனான்ஸ் இந்தியா முழுவதும் சுமார் 60 லட்சம் வாடிக்கையாளர்களுக்கு சேவையளிக்கும் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட சில்லறை வணிகக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளோம். கடந்த நிதியாண்டின் இதே காலாண்டில் இந்நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிகர லாபம் ₹276 கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது "என்று தெரிவித்தார்.

## கந்தர்வக்கோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு தினம் கடைப்பிடிப்பு



கந்தர்வகோட்டை ஜீலை 20

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு மாணவர்கள் தமிழ்நாடு இயற்கை வளம், மாநில பறவை, மாநில மரம், உள்ளிட்ட ஓவியங்கள் வரைந்து மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய தலைவரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா தமிழ்நாடு தினம் குறித்து பேசும்

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, சென்னை மாகாணம் என்ற பெயரில் இருந்த மாநிலத்தை, தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று நீண்டகாலமாகப் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. 1967ம் ஆண்டு முதல்வராக இருந்த அண்ணா, ஜூலை 18ம் தேதி தமிழக சட்டப்பேரவையில் சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற் றினார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளை நினைவுகூரும் வகையில், ஜூலை 18ம் தேதியை தமிழ்நாடு நாளாகக் கொண்டாடி வருகிறோம். எண்ணில்லா போராட்டங்களாலும், விலை மதிப்பில்லா உயிர்த் தியாகங்களாலும், நம் அன்னைத் தமிழ் நிலத்தின் பெயரை மீட்டளித்திட்ட நாள் என்பதாகும். மாணவர்கள்தமிழ்நாட்டின்பாரம்பரியம்தொன்மை, பண்பாடு, கலை, கலாச்சாரம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பெருமைகளை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என பேசினார்.

## கிளாஸ்கோ 2026 காமன்வெல்த் போட்டியின் முதன்மை பங்குதாரரான நிவா பூபா




சென்னை, ஜூலை 2026: கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் அதிகாரப்பூர்வ சுகாதாரக் காப்பீட்டு முதன்மைப் பங்குதாரராக இணைந்துள்ளதாக நிவா பூபா ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதனையொட்டி, உடல்நலப் பின்னடைவுகளிலிருந்து மீண்டு வலிமையுடன் திரும்புவோரின் மனஉறுதியை போற்றும் 'Setback se Comeback Tak' என்ற புதிய பிராண்ட் பிரச்சாரத்தையும் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சாரத்தில் ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களும், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவர்களுமான சாய்னா நேவால் மற்றும் மீராபாய் சானு இடம்பெற்றுள்ளனர். வெற்றிக்குப் பின்னால் இருக்கும் மனஉறுதி, விடாமுயற்சி மற்றும் மீண்டெழும் திறனையே இந்தப் பிரச்சாரம் முன்னிறுத்துகிறது.

நிவா பூபா ஹெல்த் இன்சூரன்ஸின் டிஜிட்டல் வணிகப் பிரிவு இயக்குநரும், தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரியுமான நிமிஷ் அகர்வால், "உடல்நலப் பின்னடைவு என்பது ஒரு முடிவல்ல; அதிலிருந்து தன்னம்பிக்கையுடன் மீண்டு வருவதற்கான தொடக்கமே. தரமான மருத்துவச் சேவையும், சரியான ஆதரவு அமைப்பும் மக்களை மீண்டும் தங்களின் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்கின்றன. அதையே எங்கள் 'Setback se Comeback Tak' பிரச்சாரம் வலியுறுத்துகிறது" என்றார்.

கடந்த ஐந்து நிதியாண்டுகளில் ரூ.14,000 கோடிக்கு நெருக்கமான மதிப்பிலான 37 லட்சத்துக்கும் மேற்பட்ட காப்பீட்டு கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிளாஸ்கோ 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு, இந்தப் பிரச்சாரம் நாடு முழுவதும் டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக தளங்கள் வழியாக மக்களை சென்றடையும் என்றும் நிவா பூபா தெரிவித்து கொண்டது.

# ஒடுக்கத்தூர் அருகே முன்னாள் சென்ற ஆட்டோ மீது கார் மோதிய விபத்தில் பள்ளி மாணவி காயம்




வேலூர் மாவட்டம் ஒடுக்கத்தூர் அடுத்த குருவராஜ பாளையம் பகுதியில் ஒடுக்கத்தூரில் இருந்து குருவராஜ பாளையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ஆட்டோவேகத்தடையை மெதுவாககடக்கும்போது பின்னால் வேகமாக வந்த கார் ஆட்டோ மீது மோதியுள்ளது. இதில் ஆட்டோ ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளர் சுப்பிரமணி வாகனத்தில் மீது ஆட்டோ மோதி கவிந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. காவல் ஆய்வாளர் விரைவாக செயல்பட்டு ஆட்டோவில் இருந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதில் ஆட்டோ ஓட்டுனர் மற்றும் பள்ளி மாணவி ஒருவருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் விபத்து ஏற்படுத்திய காரில் இருந்த 6 பேரை விசாரித்த போது, பெங்களூரை சேர்ந்த அவர்கள் ஒடுக்கத்தூர் அடுத்த பூஞ்சோலை கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டு நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் என்றும் ஒடுக்கத்தூரில் இருந்து மதுபாட்டில்களை வாங்கி சென்றதும், மது போதையில் இருந்ததும் தெரியவந்தது. இதனையடுத்து வழக்கு பதிவு செய்த வேப்பங்குப்பம் காவல் துறையினர் காரை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விபத்து தொடர்பான சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி உள்ளது.

# ஆண்டிப்பட்டி அருகே கடமலைக்குண்டில் நடைபெற்ற அனைத்து வணிகர் சங்க கூட்டமைப்பு கூட்டத்தில் தீர்மானம்



தேனி, ஆண்டிபட்டி வருசநாடு வனப்பகுதி விவசாயிகளை வெளியேற்றும் வனத்துறை நடவடிக்கையை கண்டித்து விரைவில் கடமலைக்குண்டு ஒன்றிய பகுதி முழுவதும் கடையடைப்பு போராட்டம் நடத்த வணிகர் சங்கம் உள்ளிட்ட அனைத்து வணிகர் அமைப்புகளும் முடிவு ஆண்டிப்பட்டி அருகே கடமலைக்குண்டில் நடைபெற்ற அனைத்து வணிகர் சங்க கூட்டமைப்பு கூட்டத்தில் தீர்மானம்

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள கடமலைக்குண்டில் அனைத்து வணிகர் சங்க கூட்டமைப்பு சார்பில் தனியார் திருமண மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திற்கு வழக்கறிஞர் கணேசன் தலைமை தாங்கினார்

கூட்டத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக வருசநாடு மற்றும் மேகமலை வனச்சாரத்தில் வசித்து கடுமையாக பாடுபட்டு காடுகளை விவசாய நிலங்களாக மாற்றி விவசாயம் செய்து வரும் விவசாயிகளை வனத்துறை வெளியேற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு உள்ளதை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மேலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி விவசாயிகளை வெளியேற்றும் வனத்துறையின் முயற்சியை கண்டித்து விரைவில் கடமலைக்குண்டு ஒன்றியத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் அனைத்து வணிகர்கள் கூட்டமைப்பு சார்பாக கடையடைப்பு போராட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது

மேலும் மேகமலை மற்றும் வருசநாடு வனச்சரகத்தில் வனப்பகுதியில் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாகவிவசாயம்செய்து வாழ்ந்து வரும் விவசாயிகளுக்கு ஆதரவாக அவர்கள் நடத்தும் அனைத்து போராட்டங்களுக்கும் ஆதரவு கொடுப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இக்கூட்டத்தில் கடமலைக்குண்டு மயிலாடும் பாறை வருஷநாடு உள்ளிட்ட கடமலைக்குண்டு ஒன்றியபகுதியைச்சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து அனைத்து வணிகர் கூட்டமைப்புகளை சார்ந்த நிர்வாகிகளும் விவசாய சங்க பிரதிநிதிகளும் பலர் கலந்து கொண்டனர்

# ஆகஸ்ட் 5 ல் கூடுகிறது தமிழக சட்டப்பேரவை முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்கிறது தமிழக வெற்றிக்கழக அரசு - சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் அறிவிப்பு



தமிழ்நாடு சட்டப்பேரவை 2026 ஆகஸ்ட் 5 ஆம் தேதி கூடும் என்றும், தமிழக வெற்றிக்கழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கை அன்றைய தினம் தாக்கல் செய்யப்படும் என்றும் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் அறிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஆகஸ்ட் 5 ஆம் தேதி காலை நடைபெறும் சட்டப்பேரவை கூட்டத்தில் நிதி அமைச்சர் மரிய வில்சன் 2026–27ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வார் என்றார். தொடர்ந்து, ஆகஸ்ட் 6 ஆம் தேதி வேளாண்துறை அமைச்சர் வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என்றும் தெரிவித்தார்.

பட்ஜெட் தாக்கலுக்குப் பிறகு நடைபெறும் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் எத்தனை நாட்கள் நடைபெறும் என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி வந்தே மாதரம், தேசிய கீதம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து தொடர்பாக சட்டப்பேரவையில் ஏதேனும் மாற்றம் இருக்குமா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், இதற்கு முன்பு சட்டப்பேரவையில்பின்பற்றப்பட்ட மரபே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றார்.

தமிழக வெற்றிக்கழக அரசின் முதல் பட்ஜெட், ஆளுங்கட்சிக்கு வாக்களித்தவர்களையும், வாக்களிக்காதவர்களையும் வியந்து பாராட்ட வைக்கும் வகையில் இருக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாக தெரிவித்தார்.

மேலும், சட்டப்பேரவை நிகழ்வுகள் அனைத்தும் முழுமையாக நேரலையில் ஒளிபரப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை பேரவையில் பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல், மாற்றுக் கருத்துகளையும் முழுமையாகக் கேட்டு விவாதிக்க வேண்டும். ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் அந்தப் பொறுப்பு இருப்பதாகக் கூறிய அவர், இந்தக் கூட்டத்தொடர் அமைதியாக நடைபெற வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றார்.

விளாத்திகுளம் தொகுதி திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டதற்கு முன் சபாநாயகரின் அனுமதி பெறப்பட வேண்டுமா என்ற கேள்விக்கு விளக்கம் அளித்த ஜே.சி.டி. பிரபாகர், எம்.எல்.ஏ.வை கைது செய்வதற்கு முன் சபாநாயகரின் அனுமதி பெற வேண்டும் என்ற விதி இல்லை என்று தெரிவித்தார்.

எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்ட விவரம் குறித்து காவல்துறையிடமிருந்து தகவல் கிடைத்துள்ளதாகவும், அது தொடர்பான தகவல் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்றும் கூறினார்.

பேரவை விதி 291 ன்படி, பேரவைத் தலைவரின் முன் அனுமதி இன்றி பேரவையின் அமைப்பு எல்லைக்குள் எந்த உறுப்பினரையும் கைது செய்யக் கூடாது என்றார்.

அதேபோல், பேரவை விதி 292ன்படி, உரிமையியல் அல்லது குற்றவியல் நீதிமன்ற உத்தரவுகளையும் பேரவை அமைப்பு எல்லைக்குள், பேரவைத் தலைவரின் அனுமதி இன்றி அமல்படுத்தக் கூடாது என்று விளக்கினார்.

பேரவை மண்டபம், அதன் புறக்கூடங்கள், அதனுடன் தொடர்புடைய அறைகள், அமைச்சர்களின் அறைகள், தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றக் குழுக் கூட்ட அறைகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கூடும் அறைகள் மற்றும் பேரவைத் தலைவர் அவ்வப்போது அறிவிக்கும் இடங்கள் ஆகியவை பேரவை அமைப்பு எல்லைக்குள் வரும் என்றார்.

இதற்கு வெளியே, தனிப்பட்ட இடங்களில் ஒரு சட்டமன்ற உறுப்பினரை கைது செய்ய சபாநாயகரின் முன் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும், எம்.எல்.ஏ. ஒருவர் 24 மணி நேரத்திற்கும் மேலாக காவலில் இருந்தால், அது குறித்து மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிப்பது பேரவைத் தலைவரின் கடமை என்றும் கூறினார்.

மார்க்கண்டேயன் பேச்சு தமிழக மக்களிடையே வருத்தம், கோபம் மற்றும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. நியாய உணர்வுள்ள யாரும் அந்தப் பேச்சை சரி என்று கூற மாட்டார்கள் என்றார்.

அவரது பேச்சு தொடர்பாக எழுத்துப்பூர்வமான புகார் அளிக்கப்பட்டால், சட்ட விதிகளுக்கும் பேரவை விதிகளுக்கும் உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா தொடர்பாக அவர்கள் அளித்த விளக்கம் எடப்பாடி கே. பழனிசாமிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரது பதிலை எதிர்பார்த்து வருவதாகவும் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அதிமுக சட்டமன்றக் குழுத் தலைவர் மற்றும் கொறடா தொடர்பான அறிவிப்பு சட்டப்பேரவை கூட்டத்தொடரின் போது வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

கரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய், கதவுகளை மூடிவிட்டு பேச வேண்டும் போல என்று கூறிய கருத்து குறித்து கேட்கப்பட்டபோது, அதை நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சபாநாயகர் விளக்கமளித்தார். எதிர்க்கட்சிமுன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு அரசு தரப்பில் வழங்கப்படும் பதிலை முழுமையாகக் கேட்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் முதலமைச்சர் அவ்வாறு கூறியிருப்பார் என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

# பொதுவெளி மேடையில் பேசும்போது முதலமைச்சரை அவதூறாக பேசுவது சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு வழி வகுக்கும்: அமைச்சர் பேச்சு



ஒரு சட்டமன்ற உறுப்பினர் பொதுவெளி மேடையில் பேசும்போது முதலமைச்சரை அவதூறாக பேசுவதும், கொலை மிரட்டல் விடுக்கும் அளவிற்கு பேசுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு வழி வகுக்கும் எனவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்

கரூர்க்காரர் கட்டில் கீழே சென்று அழுதார், இன்று காரில் ஏறி மயக்கம் வருகிறது என ஒருவர் கூறுகிறார் இப்படியே திமுகவினர் Drama செய்து கொண்டு இருக்கிறார்கள்

தாம்பரத்தில் மின்பங்கீடு அதிகம் வருவதாக கூறியுள்ளனர் அங்கு மீண்டும் கணக்கீடு செய்ய கூறியுள்ளேன், மின் கணக்கீடு எடுத்தவர்கள் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

டெல்லியில் நீட் தேர்வுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டனத்திற்குரியது என அமைச்சர் நிர்மல்குமார் பேட்டி

இந்த விவகாரத்தில் முதலமைச்சர் கண்டனம் தெரிவிக்கவில்லை என்ற கேள்விக்கு, ஏற்கனவேகட்சியின் சார்பாக நாங்கள் எங்கள் கண்டனங்களையும், நிலைப்பாட்டையும் தெரிவித்துவிட்டோம் என அமைச்சர் நிர்மல் குமார் பதில்

சென்னை தலைமைச் செயலகத்தில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர்,

டெல்லியில் நீட் தேர்விற்கு எதிராக நடைபெற்று வரும் மாணவர்கள் போராட்டத்தில் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது கண்டணத்திற்கு உரியது என தெரிவித்தார்.

நீட் தேர்வு நமக்கு தேவையில்லை என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை, நீட் தேர்வு மாணவர்களுக்கு எதிரானது இந்த தேர்வை ஒன்றிய அரசு மட்டுமே தடுக்க முடியும் எனவும் கூறினார்.

கடந்த கால திமுக ஆட்சியில் நீட் தேர்வை ஒழிக்க ரகசியம் இருப்பதாக உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். அது போல ஒரு பொய்யான கருத்தை நாங்கள் சொல்ல முடியாது. மக்களை பொய்யான நம்பிக்கையை கொடுக்க முடியாது எனவும் நீட் தேர்வை மத்திய அரசு நீதிமன்றம் தீர்ப்பு மூலம் கொண்டு வந்தது. எனவே முறையாக தான் இதற்கு முடிவு கொண்டு வர வேண்டும் என தெரிவித்தார்.

நீட் தேர்வு மூலம் தரமான மருத்துவர்களை உருவாக்குவோம் என கூறுவது பொய் எனவும் ஒவ்வொரு ஆண்டும் நீட் தேர்வில் குளறுபடி தான் நடக்கிறது எனவே இந்த குளறுபடியான தேர்வில் தரமற்றவர்கள் மருத்துவராக வர வாய்ப்புள்ளது. நீட் தேர்வை நடந்த முடியாத சூழலில் தான் நிர்வாகம் உள்ளது. அந்த தேர்வே தேவையில்லை என்பது நான் எங்கள் நிலைப்பாடு என கூறினார்.

இந்த விவகாரத்தில் முதலமைச்சர் கண்டனம் தெரிவிக்கவில்லை என்ற கேள்விக்கு,

ஏற்கனவே கட்சியின் சார்பாக நாங்கள் எங்கள் கண்டனங்களையும் நிலைப்பாட்டையும் தெரிவித்துவிட்டோம் என தெரிவித்தார்.

மேகதாது விவகாரம் தொடர்பாக முதல்வர் உடன் ஆலோசனை மேற்கொண்டது குறித்தான கேள்விக்கு,

மேகதாது விவகாரம் தொடர்பாக அது சம்பந்தப்பட்ட வல்லுனர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உடன் முதல்வர் தலைமையில் முதல் கட்ட ஆலோசனை மேற்கொண்டோம். வரக்கூடிய நாட்களில் மேகதாது விவகாரம் தொடர்பாக ஒரு சில முக்கிய முடிவுகளை எடுக்க உள்ளோம் என தெரிவித்தார்.

மேகதாது விவகாரத்தில் இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் என்ன நடவடிக்கை எடுக்க போகிறோம் என நாங்கள் அறிவிக்க உள்ளோம் என கூறினார்.

நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விளாத்திகுளம் எம்எல்ஏ கைது குறித்து கருத்து தெரிவித்துள்ளார் என்ற கேள்விக்கு,

விளாத்திகுளம் எம்எல்ஏ பேசியதை அனைவரும் பார்த்தோம், முதலமைச்சரின் கையை ஓடைப்பேன் என பேசி இருக்கிறார் அவர் பேசியதிற்கு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த கால திமுக ஆட்சியில் அவர்கள் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்ட நபர்கள் மீது குண்டாஸ் போட்டு உள்ளனர். 70 வயது பாட்டியை பிடிக்க ஐந்து தனிப்படை அமைத்தது தான் கடந்த கால திமுக ஆட்சியில் தான் என கூறினார்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் மேடையில் முதலமைச்சர் மீது அவதூறாக பேசுவதும் கொலை மிரட்டல் விடுக்கும் அளவிற்கும் இப்படி பேசுவது சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு வழி வகுக்கும் எனவும் அப்போது தவெக கட்சியை சேர்ந்தவர்கள் இருந்தால் அங்கே கை கலப்பு பிரச்சினையாக இருக்கும் என கூறினார்.

சட்டப்படி அவர் பேச்சுக்கு புகார் கொடுக்கப்பட்டு காவலர்கள் அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர் என தெரிவித்தார். பொதுவெளியில் முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுப்பது போன்று பேசினால் அது சட்ட விரோத செயல் என கூறினார்.

திமுக எம்எல்ஏ மார்க்கெண்டயன் உயிருக்கு அச்சுறுத்தல் என முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தது குறித்தான கேள்விக்கு,

அவர் கைது Normal procedure தான் இதில் என்ன உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. இவர்கள் எப்படி drama பண்றாங்கள் என்றால் கரூர்காரர் கட்டில் கீழே சென்று அழுதார், இன்று காரில் ஏறி மயக்கம் வருகிறது என ஒருவர் அழுகிறார் இப்படியே Drama செய்து கொண்டு இருந்தால் காவலர்கள் அவர்களது பணிகளை செய்ய வேண்டாமா என கூறினார்.

ஒரு புகார் வருகிறது அதில் காவலர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதற்கு இவ்வளவு Drama செய்கிறார்கள் எனவும் சட்டமன்ற உறுப்பினரரை கைது செய்யும் போது காவலர்களுக்கு என்ன நடைமுறை என தெரியும் எனவும் காவலர்கள் அவர்கள் அதிகாரத்திற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து உள்ளனர் என தெரிவித்தார்.

அதிமுகவில் இருந்து இன்று நிறைய பேர் விலகி உள்ளனர். அவர்கள் தவெகவிற்கு வருவார்களா என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர்

அவர்கள் கட்சி தலைமை மீது அதிருப்தியால் வெளியேறி உள்ளனர். அதற்கும் குதிரை பேரம் என்றால் என்ன அர்த்தம் குதிரை பேரம் என்பது எங்கள் எம் எல்ஏக்கள் இடம் தொகை கொடுத்து பேசினார்கள் அது தான் குதிரை பேரம் என கூறினார்.

மின் கட்டணம் குறித்து தலைமை பொறியாளர் இடம் வந்த சுற்றிக்கை குறித்தான கேள்விக்கு,

நெல்லை மாவட்டத்தில் இருந்து வந்த மின் கட்டணம் குறித்து தலைமை பொறியாளர் சுற்றிக்கை பொதுவாக வந்த சுற்றிக்கை தான் எனவும் மக்களுக்கு எந்த இடையூறும் இருக்க கூடாது என்பது தான் ஆனால் சமூக வலைதள பக்கத்தில் ஒரு சில கருத்துகளை பரப்பி வந்தனர். அதனால் அனைவரும் சென்று சரியான சோதனை மேற்கொள்ள வேண்டும் என ஒரு பொதுவான சுற்றிக்கை அனுப்பட்டது. அதை தவறாக பயன்படுத்தி உள்ளனர்.

தாம்பரத்தில் மின் பங்கீடு அதிகம் வருவதாக கூறி உள்ளனர். அங்கு மீண்டும் கணக்கீடு செய்ய கூறி உள்ளேன். ஒரு சில இடங்களில் மின் கணக்கீடு எடுத்தவர்கள் தவறு செய்து உள்ளார்களா என பார்த்து வருகிறோம்

ஏன் என்றால் மின் கணக்கீடு எடுப்பவர்களில் 5,500 இருக்க வேண்டிய இடத்தில் 800 பேர் தான் உள்ளனர். ஒரு வேலை அவர்கள் தவறுதலாக மின் கணக்கீடு எடுத்து இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சொல்லிஉத்தரவிட்டுளேன்

அது தொடர்பாக நாளை மின் வாரிய அதிகாரிகள் உடன் ஆய்வு கூட்டம் நடைபெற உள்ளது. தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மின் கட்டணத்தில் தவறுதலாக அதிக தொகை காட்டி அதற்கு பணம் செலுத்தி இருந்தால், இன்று அனைத்துமே Digital செய்யப்பட்டுள்ளது. எனவே அந்த தொகை deposit தொகையாகவே இருக்கும் என தெரிவித்தார்.

மூன்று நான்கு நாட்களாக தான் மின் கட்டணம் குளறுப்படி நடந்துள்ளதாக தகவல் வருகிறது. அது வேண்டும் என்றே பரப்பபடுகிறாதா என தெரியவில்லை எனவே ஒரு சில இடங்கள் குறிப்பாக 7 இடங்களில் மட்டும் தான் மறு மின் கணக்கீடு எடுக்க சொல்லி உள்ளோம் என தெரிவித்தார்.

மேகதாது விவகாரத்தில் 10 நாட்களில் அனைத்து வல்லுனர்கள் இடம் ஆலாசித்து முதலமைச்சர் விஜய் அடுத்த கட்ட முடிவுகளை அறிவிக்க உள்ளார் என தெரிவித்தார்.

# திருவண்ணாமலை மாவட்டம் - ஆவணியாபுரம் கிராமத்தில் சுடுகாட்டுப் பாதை இல்லாததால் நெற்பயிர் வயல் வழியாக சடலத்தை தூக்கிச் சென்ற பொதுமக்கள்



திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு தாலுகா, ஆவணியாபுரம் கிராமத்தில் பல ஆண்டுகளாக சுடுகாட்டிற்கு செல்லும் முறையான சாலை வசதி இல்லாத காரணத்தால், இறந்தவர்களின் உடல்களை நெற்பயிர் வயல்கள் மற்றும் சேறு நிலங்கள் வழியாக தூக்கிச் செல்ல வேண்டிய அவல நிலை தொடர்கிறது.

19.07.2026 அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தின் போது, நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் நெற்பயிர் வயலுக்குள் நடந்து சென்று சடலத்தை சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இதற்கான புகைப்படங்கள் மற்றும் ஆதாரங்கள் பொதுமக்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த பிரச்சினை குறித்து பலமுறை:

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர்செய்யாறு கோட்டாட்சியர் சேத்துப்பட்டு தாசில்தார்வருவாய்த் துறை அதிகாரிகள்மா ண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்ஆ கியோரிடம் மனுக்கள் அளிக்கப்பட்டும் இதுவரை நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை என கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மழைக்காலங்களில் இந்த பாதை முழுமையாக சேறும் சகதியுமாக மாறுவதால், இறுதி சடங்குகளை நடத்துவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. மனித மரியாதையை காக்கும் வகையில் உடனடியாக சுடுகாட்டுப் பாதை அமைக்க வேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்துகின்றனர்.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு ஆவணியாபுரம் கிராமத்திற்கு நிரந்தர சுடுகாட்டுச் சாலை அமைத்து தர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். ஆவணியாபுரம் கிராமம்சேத்துப்பட்டு தாலுகா

திருவண்ணாமலை மாவட்டம்

செய்தி தலைப்பு: "சுடுகாட்டுப் பாதை இல்லாத அவலம்: நெற்பயிர் வயல் வழியாக சடலத்தை தூக்கிச் சென்ற ஆவணியாபுரம் மக்கள்" டிவி ஸ்க்ரோல் (Breaking News): "திருவண்ணாமலை: சுடுகாட்டுச் சாலை இல்லாததால் நெற்பயிர் வயலில் சடலத்தை தூக்கிச் சென்ற கிராம மக்கள் – பல ஆண்டுகளாகதீர்வுஇல்லை என குற்றச்சாட்டு"

# 4 கிலோ கஞ்சாவுடன் வாலிபர் கைது..!

தேனி:கூடலூர் வடக்கு காவல் நிலைய போலீசார் மேற்கொண்ட தீவிர ரோந்து பணியின்போது, சந்தேகத்திற்கிடமான வகையில் இருசக்கர வாகனத்தில் சென்ற ஒருவரை நிறுத்தி சோதனை செய்தனர்.

சோதனையில், விற்பனைக்காக கடத்தி வரப்பட்ட 4 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், கைது செய்யப்பட்டவர் க.புதுப்பட்டியைச் சேர்ந்த சேகர் என்பவரின் மகன் கவுதம் என்பது தெரியவந்தது. இதையடுத்து, கூடலூர் வடக்கு காவல் ஆய்வாளர் பார்த்திபன் மற்றும் சார்பு ஆய்வாளர் ரவி தலைமையிலான போலீசார் கவுதத்தை கைது செய்து, அவரிடமிருந்த கஞ்சாவை பறிமுதல் செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# நீட் தேர்வு ரத்து செய்யக்கோரி ராப் பாடகர் அறிவு தலைமைச் செயலகம் முன்பு போராட்டம்

நீட் தேர்வை ரத்துசெய்ய கோரி காக்ரோச் ஜனதா பார்டி சார்பாக டெல்லியில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர் நேற்று பேரணி நடத்தும்போது காவல்துறையினர் தடியடி நடத்தியும் கண்ணீர் புகைகுண்டு வீசியும் தடுத்தனர் இதில் பல மாணவர்கள் காவல் துறையினரால் தாக்குதலுக்கு உண்டானார்கள் இது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில்...



தற்போது தமிழகத்தில் சென்னை தலைமைச் செயலகம் முன்பாக ராப் பாடகர் அறிவு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் நான்கு பேருடன் வந்து கோஷமிட்டதால் காவல்துறையினர் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்

# கடமை அறக்கட்டளையின் சார்பாக முதியோர்களுக்கு இலவச கடமை சரணாலயம் திறக்கப்பட்டது

சென்னை மணலி சின்ன மாத்தூர் பகுதியில் கடமை அறக்கட்டளையின் ஒரு அங்கம் கடமை சரணாலயம் ஆதரவற்ற முதியோர்களுக்கு இலவச முதியோர் இல்லம் வடசென்னையில் பல்வேறு சமூகப் பணிகளை செய்து வரும் கடமை அறக்கட்டளையின் நிறுவனர் லோகநாதன் மற்றும் குழுவினர் சார்பாக முதியோர் இல்லம் அமைக்கப்பட்டது இதற்கு முன்பு வட சென்னையில் கோவிட் கொரோனா நேரத்தில் இரண்டாவது அலையில் பொதுமக்கள் சுவாசிக்க ஆக்சிஜன் இன்றி தவித்த போது ஆட்டோ மூலம் இலவச ஆக்சிஜன் அளித்தார் மகளிர் காண தொழில் முனைவோர் மற்றும் கணினி இலவச பயிற்சி அளித்து 18000 மாணவிகள் பயின்று பயன் பெற்றுள்ளனர் தற்போது வட



சென்னையில் ஆதரவற்ற இலவச முதியோர் இல்லம் அமைக்கப்பட்டது இதனை சிறப்பு விருந்தினராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் விஜய் பிரபு மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்து குத்து விளக்கை ஏற்றி முதியோர் இல்லத்தை திறந்து வைத்தனர் மேலும் முதியோர் இல்லத்தை சட்ட மன்ற உறுப்பினர் விஜய் பாபு மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரன் ஆகியோர் சுற்றி பார்த்து கடமை அறக்கட்டளையின் குழுவினரை பாராட்டி வாழ்த்தினார்

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக துர்கா con sultsncy துர்கா, தி மேப் லேர்னிங் சென்டர் ஆனந்தி, எக்ஸ்ட்ரோனரா இன்டர் நேஷனல் பவுண்டேஷன் தலைவர் செந்தூர் பாரி, ட்ரேட் யூனியன் சுந்தரராஜன் சமூக ஆர்வலர் ராமகிருஷ்ணன் கல்கி எழுத்தாளர் அமிர்தம் சூர்யா பெண் அமைப்பு நிறுவனர் நர்மதா ரோட்டரி கிளப் சென்னை கேலக்ஸி ஜெயராமன் வட சென்னை மக்கள் உதவி குழு ஒருங்கிணைப்பாளர் 100 தீன் நிர்மலா தேவி தீபா சுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை

நிறுவனர் வசந்தகுமார் தலைவர் லோகநாதன், கடமை அறங்காவலர்கள் சதீஷ்குமார், பத்மநாபன், ரமேஷ் கலையரசன், கபாலி, திலீப், கடமை குழு பார்த்தசாரதி கடமை அறங்காவலர் வழக்கறிஞர் அரவிந்த் குமார், ஆகியோர் செய்து இருந்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# திருவொற்றியூரில் மாட்டு இறைச்சி வெட்டுவதை தடுக்க வந்த பாரத இந்து முன்னணி தலைவர் சிவாஜியின் மீது நடவடிக்கை எடுக்க மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் கோரிக்கை

சென்னை திருவொற்றியூர் தாங்கல் பகுதியில் அலி, இதயத்துல்லா மற்றும் பத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் தலித் சமூகத்தினர் மாட்டு இறைச்சி கடை நடத்தி வருகின்றனர் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பாரதம் இந்து முன்னணி தலைவர் சிவாஜி என்பவர் அவருடைய நிர்வாகிகள் மற்றும் போலீசாருடன் வந்து மாடு கன்னுக்குட்டியை வெட்டுவதாக கூறி வந்து அலியின் வீட்டின் கதவை தட்டி உள்ளார் இதனை அறிந்த தாங்கள் சுற்றுவட்டார பகுதி மக்கள் ஒன்று கூடி இரவு நேரத்தில் சிவாஜியை சரமாரியான கேள்வி கேட்டனர் இந்நிலையில் சூழ்நிலை பதற்றம் அடையவே சிவாஜியை போலீசார் அங்கிருந்து அனுப்பி வைத்தனர் இதனை தொடர்ந்து சிவாஜி மாட்டிறைச்சி வியாபாரிகளை மிரட்டியது தொடர்பாகவும் மேலும் இஸ்லாமிய



மக்களை மதவாத அமைப்பில் ஈடுபடுவதாக கூறி திருவொற்றியூர் காவல் நிலையத்தில் மாட்டிறைச்சி வியாபாரி அலி புகார் கொடுத்தார் இதனை தொடர்ந்து இதன் மீது எஃப் ஐ ஆர் போடாததால் சாலை மறியல் செய்தனர் இதனை தொடர்ந்து காவல்துறையினர் எஃப் ஐ ஆர் பதிவு செய்தனர் இந்நிலையில் சிவாஜியை கைது செய்யக்கோரி பல்வேறு இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகியோர் குரல் கொடுத்து வருகின்றனர் மாட்டுக்கறியை யார் வேண்டுமானாலும் சாப்பிடலாம் இதை தடுப்பதற்கு சிவாஜி யார் சிவாஜி வேறு ஒரு உள்நோக்கத்துடன் இங்கு வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர் மேலும் தமிழக வெற்றி கழகத்தின் கூட்டணி கட்சியான மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் ஹாரூன் ரசீது மற்றும் மாநில செயலாளர் தாங்கள் தாரிக் மாநில மருத்துவர் அணி செயலாளர் அன்சாரி மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் கதிர் மாவட்ட செயலாளர்கள் மௌலானா மாவட்ட துணை செயலாளர் ஆர். கே.நகர் யாசின் மாவட்ட துணை செயலாளர் யூசுப் மற்றும் ஆசிப் திருவொற்றியூர் பகுதி செயலாளர் அருண் ஆர் கே நகர் பொதுச் செயலாளர் குல்சர் திருவொற்றியூர் பகுதி பொருளாளர் யாசின் ஆகியோர் மாட்டிறைச்சி வியாபாரி அலி இதயத்துல்லா உள்ளிட்ட வியாபாரிகளை சந்தித்து நடந்தவற்றை கேட்டார் இதனை தொடர்ந்து உடனடியாக பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த ஹாரூன் ரசீது இஸ்லாமியர்கள் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கறிக்கடைகளில் தொடர்ந்து இறைச்சி வியாபாரிகளிடம் மிரட்டி பணம் வசூல் செய்வது உள்ளிட்ட மத துஷ்பிரயோகம் செய்து வரும் சிவாஜி மீது காவல் துறையின் நடவடிக்கை எடுக்க வேண்டும் கேட்டுக்கொண்டார் மேலும் இது தொடர்பாக கூட்டணியில் கட்சியில் இருக்கக்கூடிய நாங்கள் இதை முதல்வர் வரை எடுத்துச் சொல்ல உள்ளோம் என்று தெரிவித்தார்.

# தவெக கொடி, நிறத்தில் வர்ணம் பூசப்பட்ட மாநகர பஸ்

திருச்சி, ஜூலை 23

சென்னை மாநகர போக்குவரத்து கழகத் தில் தற்போது, 650க்கும் மேற்பட்ட வழித்தடங்களில் தினமும், 3,454 பஸ்கள் படுகின்றன. இவற்றின் வாயிலாக தினமும், இயக்கப் 34.60 லட்சம் பேர் பயணிக்கின்றனர்.

வரும், 2030ல் மாநகர பஸ்களின் தேவை 7,000 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால், மாநகர பஸ்களின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரித்து இயக்க, மாநகர போக்குவரத்து கழகம் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், புதிய பஸ்சில், த.வெ.க.,வின் கொடி நிறத்தில் மஞ்சள் மற்றும் சிவப்பு வண்ணங்களில் மாற்றப்பட்டு இருக்கும் புகைப்படம் சமூக



வளைதளத்தில் நேற்று பரவியது. இதை பார்த்து பலரும் விமர்சித்து கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதுகுறித்து மாநகர போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது;

"திருச்சியில் தயாராகும், 300 பஸ்கள், மாநகர போக்குவரத்து கழகத்துக்கு அடுத்த மாத இறுதிக்குள் வர உள்ளன. ஏற்கனவே, பல்வேறு வண்ணங்களில் பஸ்கள் இயக்கி வருகிறோம். இந்த புதிய பஸ்களுக்கு, புதிய நிறத்தில் வண்ணம் பூசுவது தமிழக அரசின் முடிவு" என்றனர்.

# நெய் விலையை ஆவின் நிர்வாகம் உயர்த்துவதா? பால் முகவர்கள் நலச்சங்கம் கண்டனம்

சென்னை, ஜூலை 22

தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்க நிறுவனர் பொன்னுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆவின் நெய்க்கு பொது மக்களுக்கான அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் எந்த மாற்றமும் செய்யாமல் மொத்த வினியோகஸ்தர்களுக்கான விலையில் 500 மி.லி. ஆவின் நெய்க்கு ரூ.5.25ம் (ரூ.327.17 லிருந்து ரூ.332.42 ஆகவும்), ஒரு லிட்டர் நெய்க்கு ரூ.23.10ம் (ரூ.627.62 லிருந்து ரூ.650.72 ஆகவும்), பால் முகவர்கள் மற்றும் சில்லரை வணிகர்களுக்கான விலையில் 500 மி.லி. ஆவின் நெய்க்கு ரூ.3.15ம் (ரூ.339.45 லிருந்து ரூ.342.60 ஆகவும்), ஒரு லிட்டர் நெய்க்கு ரூ.13.65ம் (ரூ.651. 13லிருந்து ரூ.664.78 ஆகவும்) கடந்த






15ந்தேதியில் இருந்து உயர்த்தி பால் முகவர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் மொத்த வினியோகஸ்தர்கள் வயிற்றில் அடிக்கும் வகையில் ஆவின் நிர்வாகம் உத்தரவிட்டிருப்பதையும், அதனை சத்தமின்றி அமல்படுத்தி இருப்பதையும் வன்மையாக கண்டிக்கிறேன். எனவே ஆவின் நெய் விலை உயர்வு குறித்த உத்தரவை உடனடியாக ஆவின் நிர்வாகம் திரும்பப்பெற வேண்டும். இல்லாவிட்டால் ஆவின் நெய் விற்பனையை புறக்கணிப்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 8வது மாடியில் இருந்து குதித்து பிளஸ்1 மாணவி தற்கொலை

கேளம்பாக்கம், ஜூலை 22

அடுக்குமாடி குடியிருப்பின் 8வது மாடியில் இருந்து குதித்து பிளஸ்1 மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தை அடுத்த ஏகாட்டூர் பகுதியில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் 8வது மாடியில் வசித்து வருபவர் அஜிஸ். இவரது மகள் சபியா (வயது 16). இவர், அதே வளாகத்தில் உள்ள பள்ளியில் பிளஸ்1 படித்து வந்தார். சபியா, பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்ததும் செல்போனில் 'இன்ஸ்டாகிராம்' பயன்படுத்தி வந்ததாகவும், இதனை பெற்றோர் கண்டித்ததாகவும் தெரிகிறது. நேற்று மாலை மீண்டும் செல்போன் பயன்படுத்தியதை அவரது தாயார் கண்டித்ததாக கூறப்படுகிறது.

இதனால் விரக்தி அடைந்த சபியா, அடுக்குமாடி குடியிருப்பின் 8வது மாடியில் இருந்து கீழே குதித்தார்.

இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தகவல் அறிந்து வந்த கேளம்பாக்கம் போலீசார் மாணவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோவை, நீலகிரியில் அணைகளின் நீர்மட்டம் குறைந்தது: குடிநீர் தட்டுப்பாடு அபாயம்



கோவை, ஜூலை 22

பசிபிக் பெருங்கடலில் இயல்பை விட வெப்பநிலை மாற்றம் அதிகரித்துள்ளது. இதனால், தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை இயல்பை விட குறைந்து வருகிறது. ஜூன் முதல் செப்டம்பர் இறுதி வரை வெப்பநிலை நீடிக்கும் என்றும் வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோவை மாவட்டம் தென்மேற்கு பருவமழை காலத்தில் அதிக மழை பெறும் மாவட்டம் ஆகும். மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை பெய்யும்போது, பில்லூர், சிறுவாணி, ஆழியாறு, சோலையாறு, திருமூர்த்தி, அமராவதி அணைகளுக்கு தண்ணீர் வரும். அதன்பின்னர் வடகிழக்கு பருவமழை காலத்திலும் மழை பெய்யும். இரு பருவங்களிலும் மழை பெய்யும் மாவட்டமாக விளங்கிய கோவையில், எல்நினோ தாக்கத்தால் தென்மேற்கு பருவமழை பெய்வது குறைந்து வருகிறது.

கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட 30 சதவீதம் குறைவாக இருக்கும் என்று வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். வழக்கமாக கோவை மாவட்ட பகுதிகளில் ஜூலை மாதம் மழை பெய்து கொண்டே இருக்கும். ஆனால் அந்த நிலை மாறி வெயில் வாட்டுவதுடன், மழை குறைந்து வருகிறது.

இதனால் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. சோலையார் அணையின் நீர்மட்டம் மள, மளவென குறைந்து 78.92 அடியாக உள்ளது. ஆழியாறு55.60 அடி, பரம்பிக்குளம்21 அடி, திருமூர்த்தி அணை33.94 அடி, சிறுவாணி அணை21 அடி, பில்லூர் அணை85 அடிஎன்றுகுறைந்துள்ளது.

எனவே இதே நிலை நீடித்தால் கோவை மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினை ஏற்படும். விவசாயத்துக்கும்போதிய அளவு நீர் கிடைக்காத நிலை ஏற்படும். அதனால் பொதுமக்கள், விவசாயிகள் நீர் சிக்கன முறையை கடை பிடிக்க வேண்டும் என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மதுபானங்கள் கொள்முதலில் புதிய நடைமுறை 'டாஸ்மாக்' நிர்வாகம் அதிரடி

சென்னை, ஜூலை 22

தமிழகத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட 'டாஸ்மாக்' கடைகள் மூலம் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபான வகைகளை 11 நிறுவனங்களிடம் இருந்தும், 'பீர்' வகைகள் 6 நிறுவனங்களிடம் இருந்தும் 'டாஸ் மாக்' நிர்வாகம் கொள்முதல் செய்கிறது.

இதில் பிரபல அரசியல் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் நடத்தும் நிறுவனங்களும் அடங்கும். எந்த நிறுவனத்தின் மதுபானம் அதிகம் விற்பனையாகிறதோ, அவை கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டன. அதாவது குறிப்பிட்ட நிறுவனங்களின் மது வகைகள் மட்டும் 60 முதல் 70 சதவீதம் வரையில் கொள்முதல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு த.வெ.க. அரசு அமைந்தவுடன் 'டாஸ் மாக்' நிர்வாகம் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி கடந்த 6ந்தேதி அன்று 'டாஸ்மாக்' நிர்வாக கூட்டம் நடைபெற்றது. இதில் குறிப்பிட்ட சில நிறுவனங்களிடம் இருந்து மட்டும் அதிகளவு மதுபானங்களை கொள்முதல் செய்யாமல் அனைத்து நிறுவனங்களிடம் இருந்தும் சரிசமமாக மதுபானங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி அனைத்து நிறுவனங்களிடம் இருந்து சரி சமமாக மதுபானங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. உயரக மதுபானங்கள் விற்பனை செய்யப்படும் 'எலைட்' கடை களில் பிரீமியம், மீடியம் ரக மதுவகைகளில் ஒரு பெட்டி கட்டாயம் விற்பனை செய்ய வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது.

'டாஸ்மாக்' கடைகளில் விற்பனை செய்யப்படும் சாதாரண ரக மதுபான வகைகளை அனைத்து மதுபான உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து சமமாக கொள்முதல் செய்தால், மதுபிரியர்கள் விரும்பும் மது வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும். இது மறைமுகமாக குறிப்பிட்ட நிறுவனத்தின் மதுவகைகளை அதிகளவில் கொள்முதல் செய்வதற்கு புறவழி செயல் போன்று அமைந்துவிடும். மதுபிரியர்கள் விரும்பாத மதுபானங்கள் விற்பனையாகாமல் அப்படியே கடையில் தேங்கிவிடும்' என்பது 'டாஸ்மாக்' ஊழியர்களின் கருத்தாக உள்ளது.

புதுச்சேரி போன்று அண்டை மாநிலங்களில் விற்கப்படும் வெளிநாட்டு மதுபான வகைகளை யும் 'டாஸ்மாக்' நிர்வாகம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும் என்பது மதுபிரியர்களின் விருப்பமாக இருக்கிறது.

# யானைகளுக்கு தனியார் அமைப்புகள் சிகிச்சை அளிக்கக் கூடாது சென்னை ஐகோர்ட்டு

சென்னை, ஜூலை 22

சென்னைஐகோர்ட்டில், விலங்குகள் நல ஆர்வலர் எஸ்.முரளிதரன் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், "தமிழ்நாட்டில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கும், கோவில் யானைகளுக்கும் சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனத்துக்கு தலைமை வனப்பாதுகாவலர் அனுமதி வழங்கியுள்ளார்.

வனத்துறையில் தகுதியான கால்நடை டாக்டர்கள், உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள நிலையில், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனங்களை அனுமதிக்க வேண்டிய அவசியம் என்ன? என்பதை தலைமை வனப்பாதுகாவலர் விளக்கம் அளிக்கவில்லை. எனவே, யானைகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கி உத்தரவை ரத்து செய்ய வேண்டும். யானைகளுக்கு சிகிச்சை அளிக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்த அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

உத்தரவு

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் என். சதீஷ் குமார், டி. பரத சக்கரவர்த்தி ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள யானைகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் தொண்டு நிறுவனங்களை பணியமர்த்தக்கூடாது. இந்த மனுவுக்கு வருகிற 31ந்தேதிக்குள் வனத்துறை பதில் அளிக்கவேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளது.

# மருத்துவமனைகளில் ஆதார் பதிவு செய்வது வாழ்நாள் முழுவதும் சிகிச்சைக்கு உதவும்

சென்னை, ஜூலை 23

'மருத்துவமனைகளில் ஆதார் எண் அளித்து, ஆபா ஐ.டி., உருவாக்குவதன் வாயிலாக, நாட்டின் எந்த பகுதியில் இருந்தும், முந்தைய சிகிச்சைகளை பார்த்து, தொடர் சிகிச்சை பெற முடியும்' என, அரசு மருத்துவமனை முதல்வர்கள் தெரிவித்தனர்.

'ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன்' திட்டத்தின்கீழ், ஹெச்.எம்.ஐ.எஸ்., என்ற சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பை, மத்தியஅரசுசெயல்படுத்தி வருகிறது. இந்த தகவல் அமைப்பில், அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளிடம், அவர்களின் ஆதார் எண் பெற்று, அதன் வாயிலாக, 'ஆபா ஐ.டி.,' உருவாக்கப்படுகிறது. இந்த ஐ.டி., உருவாக்குவோரின் சிகிச்சை விவரங்களை, ஹெச்.எம்.ஐ.எஸ்., தகவல் அமைப்பில் சேகரித்துவைக்கமுடியும். அதேபோல், தனியார் மருத்துவமனைகள், தனித்தனி தகவல் அமைப்பை பயன்படுத்தினாலும், மத்திய அரசின் தகவல் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

இத்தகவல் அமைப்பில் நோயாளிகளின் விவரங்களை சரியாக சேகரிக்காத, 203 மருத்துவமனைகளின் பட்டியலை, தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில், தமிழகத்தை சேர்ந்த 26 மருத்துவமனைகள் உள்ளன. அனைத்து மருத்துவமனைகளிலும், 'மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு, ஆபா ஐ.டி., உருவாக்கி, அவர்களின் சிகிச்சை விவரங்களை சேகரிக்க வேண்டும்' என மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. இதற்கு ஆதார் எண் கட்டாயம் என்பதால், அரசு மருத்துவமனைகளில், நோயாளிகளிடம் ஆதார் எண் பெறுவது சிரமமாக உள்ளது என, மருத்துவமனை முதல்வர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து, அரசு மருத்துவமனை முதல்வர்கள் கூறியதாவது:

தனியார் மருத்துவமனைகளில், ஒரு நோயாளி செல்லும்போது, அங்கு ஆதார் எண் கேட்டால், ஆட்சேபனை தெரிவிக்காமல் கொடுக்கின்றனர். அதேநேரம், அரசு மருத்துவமனைகளில் மத்திய அரசின் அறிவுறுத்தல் படி, ஆபா ஐ.டி., உருவாக்க, ஆதார் எண் கேட்டால், அவற்றை வேறு மாதிரியாக சித்தரிக்கின்றனர். குறிப்பாக, ஆதார் இருந்தால்தான், அரசு மருத்துவமனையில் சிகிச்சையா என, கேட்கின்றனர்.

ஆபா ஐ.டி., என்பது, நோயாளிகளுக்கு வாழ்நாள் முழுவதும்பயனளிக்க கூடியது. இதை உருவாக்குவோர், நாடு முழுவதும் எந்தவொரு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைக்கு சென்றாலும், அங்கு தங்கள் மொபைல் எண்ணை அளிப்பதன் வாயிலாக, அவர்களின் முந்தைய மருத்துவ சிகிச்சையை, அங்குள்ள டாக்டர் தெரிந்து கொள்ள முடியும். இது குறித்து, மருத்துவமனைக்கு வரும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, மாநில அரசும் அறிவுறுத்தி உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

22.07.2026

# தவெக அரசின் ஆணவத்திற்கு மக்கள் முடிவுகட்டுவர்: மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜூலை 22

முதல்அமைச்சர் விஜய் பற்றி அவதூறாக பேசியதாக விளாத்திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் நேற்று அதிரடியாக கைது செய்யப்பட்டார். இதனையடுத்து நீதிபதி வருகிற 3ந் தேதி வரை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் அவரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அதன் படி, மார்க்கண்டேயனை போலீசார் பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர்.

திமுக எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டதை கண்டித்து அக்கட்சி நிர்வாகிகள் பலரும் எதிர்ப்புகளையும், கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

ஆட்சிக்கு எதிரான விமர்சனங்களை எல்லாம் கிரிமினல் சட்டப்பிரிவுகளைப் பயன்படுத்தி அடக்கிடப் பார்க்கும் த.வெ.க. அரசின் போக்கைக் கடுமையாகச் சாடியுள்ளது தனியார் ஆங்கில நாளிதழின் இன்றைய தலையங்கம்.

நம் முதல்அமைச்சருக்குப் புரிவதுபோல சொல்ல வேண்டுமென்றால், இந்தியா முழுவதும் வெளியாகும் பத்திரிகையின் நடுப்பக்கம் அவரது தலையில் நங்கு நங்கென்று குட்டியிருக்கிறது. ஆட்சியின் அலங்கோலங்களை எல்லாம் கைது நடவடிக்கைகளால் சரிக்கட்டி விடலாம் என்று இந்த அரசு எண்ணினால் மக்களே அந்த ஆணவத்துக்குச் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கல்குவாரிகளை நிரந்தரமாக மூட வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதத்தை துவக்கிய விவசாயி

பொள்ளாச்சி, ஜூலை 22

பொள்ளாச்சியைஅடுத்தகிணத்துக்கிடவு பகுதியில் உள்ள அனைத்து கல்குவாரிகளையும் நிரந்தரமாக மூட வேண்டும் என்று வலியுறுத்தி விவசாயி ஒருவர் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

பொள்ளாச்சியை அடுத்த கிணத்துக்கடவு ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் 40க்கும் மேற்பட்ட கல்குவாரிகள் இயங்கி வருகின்றன. அரசின் அனுமதி காலம் முடிந்த நிலையிலும் சில குவாரிகள் முறைகேடாக இயங்கி வருவதாகவும் கூறப்படுகிறது. மேலும் இந்த குவாரிகளில் அனுமதிக்கப்பட்ட அளவையும் மீறி வெடி வைத்து கற்கள் வெட்டி எடுக்கப்படுவதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். அதோடு இந்த குவாரிகளால் நிலத்தடி நீர் மட்டம் பாதித்து கிணறுகளில் நீர் வற்றி விவசாயம் பாதிப்பதாகவும் கனிம வளத்துறை மற்றும் வருவாய் துறை உயர் அதிகாரிகளுக்கு விவசாயிகள் அடிக்கடி புகார் மனுவும் அனுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் நம்பர் 10 முத்தூரைச் சேர்ந்த விவசாயி முருகானந்தம், கல்குவாரிகளை நிரந்தரமாக மூட வேண்டும் என்று வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக கூறி நேற்று தனது போராட்டத்தை துவக்கினார். இது குறித்து முருகானந்தம் செய்தியாளர்களிடம் கூறுகையில், கிணத்துக்கடவு வட்டாரத்தில் அனுமதி பெற்றும், அனுமதியின்றியும் ஏராளமான கல்குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த குவாரிகளில் அதிக அளவு வெடிபொருட்கள் பயன்படுத்தி கற்கள் வெட்டி எடுப்பதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக பாதிக்கிறது. கிணறுகளில் நீர் வற்றி விவசாயம் பெரிதும் பாதிக்கிறது. இது குறித்து கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளைசந்தித்துபுகார்மனுகொடுத்து வருகிறோம்.

ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்போது புதிதாக பொறுப்பேற்ற அரசிடமும் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி புகார் மனு கொடுத்தோம். தலைமைச் செயலர் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் உள்ளிட்டோரிடம் புகார் மனு கொடுத்தோம். நிச்சயம் நடவடிக்கை எடுப்பதாக அவர்களும் உறுதி அளித்தனர். ஆனால் இங்குள்ள மாவட்ட ஆட்சியர், சார் ஆட்சியர், தாசில்தார் உள்ளிட்டோர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மெத்தனமாக உள்ளனர்.

கிணறுகளில் நீர்வற்றி விவசாயம் பாதித்த நிலையில், தற்போது குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே கிணத்துக்கிடவு வட்டாரத்தில் உள்ள ஒட்டுமொத்த குவாரிகளையும் நிரந்தரமாக மூட வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை துவக்கி உள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். தகவல் அறிந்து வருவாய்த்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து முருகானந்தம் மற்றும் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது: சபாநாயகர் விளக்கம்



சென்னை, ஜூலை 22

திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயன் கைது தொடர்பாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் விளக்கம் அளித்து கூறியதாவது: பேரவை தலைவரை கேட்டுவிட்டுதான் கைது செய்ய வேண்டும் என்கிற விதி இல்லை. 291வது விதி என்ன சொல்கிறது என்றால்.. "பேரவைத் தலைவர் முன் அனுமதியின்றி எவரையும் பேரவை அமைப்பு எல்லைக்குள் கைது செய்யக்கூடாது. அதைபோன்று உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தின் கட்டளையையோ, அறிவிப்பையோ பேரவை தலைவர் முன் அனுமதியின்றி பேரவையின் அமைப்பு எல்லைக்குள் சேர்ப்பித்தல் கூடாது. அமைப்பு எல்லை என்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களும் தெரிய வேண்டும் என்பதை கடமையாக கருதுகிறேன். பேரவையின் அமைப்பு எல்லை என்பது சட்டமன்ற உறுப்பினர்களை பொறுத்தவரை பேரவை மண்டபம், அதன் புறக்கூடங்கள், அதனை சார்ந்த அலுவலகங்கள், அமைச்சர்களின் அறைகள், நூலகம், சிற்றுண்டி சாலை, தலைமை செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்தில் உள்ள உறுப்பினர் குடியிருப்புக்குள் உள்ள குழுக்கள் கூடும் அறை, நூலகம் மற்றும் பேரவை தலைவரால் அவ்வப்போது குறிப்பிடப்படும் இடங்கள் உள்ளிட்ட அனைத்தும் பொருந்தும்.

# விருதுநகர்: 7 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த முதியவர் கைது



விருதுநகர், ஜூலை 22

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஒருவர், தனது வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, அதே பகுதியைச் சேர்ந்த சின்ன அண்ணன் (வயது 69) என்ற முதியவர், அந்த சிறுமியை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அந்த சிறுமி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாய், உடனடியாக திருச்சுழி போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து சென்றனர். பின்னர் சின்ன அண்ணன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# இன்றைய ராசி பலன்கள் (22.07.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் அலுவலகத்தில் நேர்மறையான மாற்றங்கள் உண்டாகும். நிலுவையில் இருந்த வேலைகள் சிறப்பாக முடிவடையும். குடும்பத்தினருடன் மகிழ்ச்சியான நேரத்தை செலவிடுவீர்கள்.

**ரிஷபம்:** பொருளாதார நிலை உயரும். நிதி வரவு திருப்திகரமாக இருக்கும். புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் தேவை.

**மிதுனம்:** திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பணியிடத்தில் மேல் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். தேவையில்லாத தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**கடகம்:** உறவினர்கள் மூலம் நல்ல செய்தி வந்து சேரும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உணர்ச்சிவசப்பட்டு முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** வேலையில் புது உத்வேகம் கிடைக்கும். உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் தேடிவரும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**கன்னி:** வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். நண்பர்களின் ஆதரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும். பேச்சுவார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** தொழில் ரீதியாக புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். பொருளாதார ரீதியாக முன்னேற்றமான நாள். பயணங்கள் மூலம் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** திடீர் பணவரவுக்கும் வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தில் இருந்து வந்த தடைகள் விலகும். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். மன அழுத்தம் குறைந்து அமைதி உண்டாகும். தம்பதியிடையே அன்பு அதிகரிக்கும்.

**மகரம்:** வேலைச்சுமை சற்று அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கும். நிதானமாகச் செயல்படுவது நல்லது. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

**கும்பம்:** காலை 7:54 மணி வரை சந்திராஷ்டமம் இருப்பதால், புதிய முயற்சிகளையோ அல்லது பெரிய முதலீடுகளையோ தவிர்ப்பது நல்லது. அதன் பின் நிலைமை சாதகமாக மாறும்.

**மீனம்:** இன்று காலை 7:54 மணிக்கு மேல் சந்திராஷ்டமம் தொடங்குவதால், வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து அமைதி காப்பது நல்லது. முக்கிய முடிவுகளை எடுப்பதைத் தள்ளிப் போடவும்.

# தென்காசி: வீட்டிற்குள் புகுந்த நாகப் பாம்பு



தென்காசி, ஜூலை 23

தென்காசி அருகே வீட்டிற்குள் புகுந்த 5 அடி நீள நாகப் பாம்பை வனத்துறையினர் லாவகமாகப் பிடித்து, அடர்ந்த வனப்பகுதியில் பத்திரமாக விடுவித்தனர்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் அடுத்துள்ள மேலகரம் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்தவர் மாரியப்பன்.

இவரது வீட்டின் சமையலறைக்குள் இன்று காலை திடீரென நச்சுத்தன்மை கொண்ட நாகப் பாம்பு ஒன்று புகுந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் உடனடியாக வீட்டை விட்டு வெளியேறி, குற்றாலம் வனத்துறையினருக்குத் தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்த வனத்துறை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். பின்னர் அவர்கள் சமையலறைப் பொருட்களுக்கு இடையே மறைந்திருந்த நாகப் பாம்பை பிரத்யேகக் கருவிகள் மூலம் லாவகமாகப் பிடித்தனர். மீட்கப்பட்ட பாம்பு சுமார் 5 அடி நீளத்தில் இருந்தது.

பின்னர், பிடிபட்ட நாகப் பாம்பு பாதுகாப்பான பெட்டியில் அடைக்கப்பட்டு, செங்கோட்டை அருகே உள்ள அடர்ந்த வனப்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு பத்திரமாக விடுவிக்கப்பட்டது. வனத்துறையினரின் இந்த விரைவான மற்றும் துரிதமான நடவடிக்கையை அப்பகுதி பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டினர்.

# வங்காளதேச அணிக்கு எதிரான டெஸ்ட்: ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு



வங்காளதேச கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு அணிக்கு எதிராக 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இந்த டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 13ந்தேதி தொடங்க உள்ளது. முதல் டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் 13ந்தேதி தொடங்கி 17ந்தேதி வரை டார்வினில் உள்ள மாரா மைதானத்தில் நடைபெற உள்ளது. ரண்டாம் டெஸ்ட் ஆகஸ்ட் 22ந்தேதி தொடங்கி 26ந்தேதி வரை மெக்கேவில் கிரேட் பேரியர் ரீப் மைதானத்தில் நடைபெற உள்ளது.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள ஆஸ்திரேலிய அணி வீரர்களின் பெயர்களை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. அதன் விபரம்;

பேட் கம்மின்ஸ் (கேப்டன்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, கேமரூன் கிரீன், ஜோஷ் ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்லிஸ், மார்னஸ் லாபுஷேன், நாதன் லயன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், ஜேக் வெதரால்ட், பியூ வெப்ஸ்டர்.

# கால்பந்து உலகக்கோப்பையுடன் தாயகம் திரும்பிய ஸ்பெயின் ரசிகர்கள் உற்சாக வரவேற்பு

உலகக்கோப்பை கால்பந்து தொடரில் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் அர்ஜென்டினா அணிகள் மோதின. பரபரப்பாக நடந்த இப்போட்டியில் 10 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்திய ஸ்பெயின் உலகக்கோப்பையை வென்றது. நந்நிலையில், உலகக்கோப்பையை வென்ற ஸ்பெயின் அணி இன்று தாயகம் திரும்பியுள்ளது. தலைநகர் மாட்ரிட் திரும்பிய ஸ்பெயின் அணிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், பஸ்சில் இருந்தவாறு தலைநகரில் உலகக்கோப்பையுடன் ஸ்பெயின் வீரர்கள் அணிவகுப்பு நடத்தினர். இந்த அணிவகுப்பில் லட்சக்கணக்கான ஸ்பெயின் ரசிகர்கள் பங்கேற்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# சென்னை கிராண்ட்மாஸ்டர்ஸ் செஸ்: உலக சாம்பியன் குகேஷ் தோல்வி



மற்றொரு ஆட்டத்தில், உஸ்பெகிஸ்தான் வீரர் நோடிர்பெக் அப்துசத்தோரோவ், இந்திய வீரர் நிஹால் சரினை 38வது காய் நகர்த்தலில் வென்றார். இந்திய வீரர் பிரனேஷ் அமெரிக்காவின் ஹான்ஸ் நிமன் மற்றும் பிரான்ஸ் வீரர் அலிரெஜா ரஷியாவின் டிமிட்ரி இடையிலான ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

5 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், அர்ஜூன் எரிகைசி மற்றும் அலிரெஜா தலா $3\frac{1}{2}$ புள்ளிகளுடன் கூட்டாக முதலிடத்தில் உள்ளனர்.

போட்டியின் 6வது சுற்று ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன. அர்ஜூன் தனது முன்னிலையை தக்கவைத்துக் கொள்வாரா? உலக சாம்பியன் குகேஷ் மீண்டும் வெற்றிப் பாதைக்கு திரும்புவாரா? என்ற எதிர்பார்ப்பில் செஸ் ரசிகர்கள் உள்ளனர்.

# கோப்பையை ஏந்திய ஸ்பெயின்... திரும்பி நின்ற அர்ஜென்டினா வைரலாகும் வீடியோ




பிபா உலகக் கோப்பையை ஸ்பெயின் அணி கையில் ஏந்தி கொண்டாடியபோது அர்ஜென்டினா வீரர்கள் திரும்பி நின்று கொண்டது சமூக வலைதளங்களில் விமர்சனங்களை உண்டாக்கி உள்ளது. அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா ஆகிய நாடுகள் இணைந்து நடத்திய 23வது பிபா உலகக்கோப்பை கால்பந்து தொடர் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. 48 அணிகள் பங்கேற்ற இந்த தொடரின் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் அணி 10 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தி, தனது 2வது உலகக்கோப்பை சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் சாம்பியன் கோப்பையை ஸ்பெயின் அணி கையில் ஏந்திய போது அர்ஜென்டினா வீரர்கள் திரும்பி நின்று கொண்டனர். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வரும்நிலையில், வெற்றி பெற்ற அணியை பாராட்ட மனமில்லாமல் முதுகை காண்பித்து நின்றதாக சமூக வலைத்தளங்களில் விமர்சனம் எழுந்துள்ளது.

# 4 நாட்களில் இத்தனை கோடியா? வசூல் வேட்டையில் 'தி ஒடிசி'



ஹாலிவுட் திரைத்துறையில் முன்னணி டைரக்டர்களில் ஒருவர் கிறிஸ்டோபர் நோலன். இவரது இயக்கத்தின் உருவாகியுள்ள திரைப்படம் 'தி ஒடிசி'. இப்படத்தில் டாம் ஹாலண்ட், ஆன் ஹாத்வே, ஜெண்டயா உள்பட பலர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர். இத்திரைப்படம் இந்தியா உள்பட உலகம் முழுவதும் கடந்த 17ம் தேதி ரிலீஸ் ஆனது.

இந்நிலையில், 'தி ஒடிசி' திரைப்படம் ரிலீஸ் ஆன 4 நாட்களில் (நேற்று வரை) உலகம் முழுவதும் ரூ. 2,700 கோடி வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. குறிப்பாக இந்தியாவில் மட்டும் ரூ. 70 கோடி வசூல் செய்துள்ளது. 'தி ஒடிசி' திரைப்படம் ரூ. 2,100 கோடி பட்ஜெட்டில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

# சமூக வலைதளத்தில் தொடரும் தொல்லை... போலீசில் புகார் அளித்த நடிகை ஐஸ்வர்யா சிந்தோகி



பிரபல கன்னட டி.வி. நடிகை ஐஸ்வர்யா சிந்தோகி. இவர் கன்னட 'பிக்பாஸ்' மூலம் பிரபலமானார். இந்த நிலையில் நடிகை ஐஸ்வர்யா சிந்தோகி, பெங்களூரு சஞ்சய் நகர் போலீசில் பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது:

சமூக வலைதளங்கள் மூலம் எனக்கு தொடர்ந்து தொல்லை கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 2 மாதங்களாக போலி கணக்குகள் மூலம் எனக்கு அவதூறான கருத்துகள் அனுப்புவது, இழிவுப்படுத்தும் செய்திகளை வெளியிடுவது என தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருகிறேன். இது தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக உள்ளது. ஏற்கனவே கடந்த 2022ம் ஆண்டிலும் இது போன்ற துன்புறுத்தலை எதிர்கொண்டேன். அப்போதும் இதுபற்றி சஞ்சய்நகர் போலீசில் புகார் அளித்தேன்.

அதன்பிறகு இதுபோன்ற தொல்லைகள் இல்லாமல் இருந்தது. தற்போது மீண்டும் கடந்த 2 மாதங்களாக துன்புறுத்தலுக்கு ஆளாகி வருகிறேன். எனக்கு நன்கு அறிமுகமான நபர் ஒருவர் வேறொரு பெயரில் சமூக வலைதளங்களில் போலி கணக்குகளை உருவாக்கி தன்னை துன்புறுத்துவதாக சந்தேகம் உள்ளது. மன்னத் நகுல் என்பவரே சமூக வலைதளங்கள் மூலம் தனக்கு தொல்லை கொடுத்து வருகிறார். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து சஞ்சய்நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். ஏற்கனவே நடிகைகள் ரம்யா மற்றும் ருக்மினி வசந்த் உள்ளிட்ட நடிகைகளுக்கு சமூக வலைதளங்களில் தொல்லை கொடுப்பது தொடர்பாக புகார் அளித்துள்ள போதிலும், தொடர்ந்து இத்தகைய சம்பவங்கள் நடந்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# உண்மை சம்பவ கதையில் அதர்வாவின் புதிய படம்... ரிலீஸ் அப்டேட்




நடிகர் அதர்வா நடிப்பில் இயக்குநர் ராஜமோகன் இயக்கியுள்ள புதிய திரைப்படம் 'அட்ரஸ்'. சமூக கருத்துகளுடன் த்ரில்லர் பாணியில் உருவாகியுள்ள இந்தப் படம், உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பதாக படக்குழு தெரிவித்துள்ளது.

1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, தமிழக–கேரள எல்லைப் பகுதியில் அமைந்திருந்த ஒரு கிராமம் தனது அதிகாரப்பூர்வ முகவரியையே (Address) இழந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இப்படத்தின் கதைக்களம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த கிராம மக்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரப் போராட்டத்தை த்ரில்லர் மற்றும் சமூக அம்சங்களுடன் படம் பதிவு செய்கிறது.

இந்தப் படத்தில் நடிகர் அதர்வா முரளி, 'காளி' என்ற இளைஞராக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக பூஜா ஜாவேரி நடித்துள்ளார். மேலும், தம்பி ராமையா, தேவதர்ஷினி உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

'குங்குமப்பூவும் கொஞ்சும் புறாவும்', 'வானவராயன் வல்லவராயன்' உள்ளிட்ட படங்களை இயக்கிய ராஜமோகன் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். அஜய் கிருஷ்ணா தயாரித்துள்ள இப்படத்திற்கு கிரிஷ் கோபாலகிருஷ்ணன் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், 'அட்ரஸ்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த படம் வருகிற செப்டம்பர் மாதம் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. வித்தியாசமான கதைக்களம் மற்றும் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த படத்தை எதிர்பார்த்து ரசிகர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டுள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.